சென்னை – காசிமேடு துறைமுகத்தை

தமிழ்நாடு அரசே ஏற்று நடத்திட வேண்டும்!

சட்டப் பேரவையில் ஆர்.கே.நகர் தொகுதி உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 27 -

சென்னை காசிமேடு துறைமுகத்தை தமிழ்நாடு அரசே ஏற்று நடத்திட வேண்டும் என்று வேளாண், மீன்வளம், கால்நடை, பால்வளத்துறை மானியத்தில் ஆர்.கே.நகர் தொகுதி உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர் வேண்டுகோள் விடுத்தார்.

வேளாண் - மீன்வளம் - கால்நடை, பால்வளத் துறை மானியத்தில் ஆர்.கே.நகர் தொகுதி உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர் பேசியதாவது:

அஞ்சாத சிங்க மென்றும், வெண்தாடி வேந்தரென்றும், நெஞ்சாரத் செந்தமிழர் போற்றும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரை வணங்குகின்றேன். பாசத்தின் அகராதி, புரியாத புதுமை, பொறுமையின் தலைமை, பண்பின் பல்கலைக்கழகம், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவை வணங்குகின்றேன். அசைத்திட்ட எழுதுகோலால் தூக்கம் போக்கி, அடங்கி நின்ற தமிழர்களை எழவே செய்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். விசையொழிந்த தமிழகத்தை தட்டித் தட்டி, வீறு கொண்டு எழவைத்த மக்கள் முதல்வர், இந்தியாவின் நுழைவுவாயிலாய் தமிழகத்தை மாற்றிட்ட, அகிலம் போற்றும் நம் அன்புத் தலைவர் அவர்களை வணங்குகின்றேன்.

அழகுதமிழ் பூமிக்கு நம்மை ஆளுகின்ற தலைவன் தந்த ஆற்றல் வரமாம், ஆளும் அறமாம், எங்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். மாண்புடன் இவ்வவையினை நடத்தும் பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும் வணங்குகின்றேன். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தையே நமக்காகத் தாரை வார்த்த தமிழக வாக்காளப் பெருமக்களையும் போற்றி வணங்கி, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலன் மற்றும் பால்வளத் துறை மீதான மானியக் கோரிக்கைகளின் விவாதத்தில் பேச விழைகிறேன்.

வயல்களில் வரப்புகள் உயர்ந்தாலும், தண்ணீர் தேங்குவதோ உழவர்களின் கண்களில்தான். ஏற்றப்பட்ட விளக்கைவிட, ஏற்றிவைத்த தீக்குச்சியே உயர்வானது. எனவே, அத்தீக்குச்சியாய் விளங்கும் உழவர்களைப் போற்றுவதிலும், பருவமழை மாறுபாடுகளால் வேளாண்மை தோல்வியுற்ற காலத்தில் உழவர்களுக்கு ஆதரவாய் விளங்கும் கால்நடைகள் மீதான அக்கறையிலும்; மிச்ச மீதியையும் 'மச்சம்' என நினைத்துப் புன்னகை பூக்கும் மீனவர்கள் வயிறுகளையும், விடையில்லாத விதியோடு பிறந்ததால் கிடைத்தது போதும் என்று உயிரினைப் பணயம் வைத்து, புரதச் சத்து உணவளிக்கும் மீனவர்களின் வாழ்வினைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதிலும்; உலக பால் தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த மாதத்திலேயே பால்வள மானியக் கோரிக்கையை நிறைவேற்றுகிற இவ்வரசின் ஈடுபாட்டை வியந்து மாண்போடு பேச விரும்புகின்றேன்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்!

வேளாண்குடி மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1990 ஆம் ஆண்டில் முதன் முதலில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இலவசமின்சாரத்திட்டத்தைப் பற்றி இன்றளவும் உழவர்கள் பெருமிதம்கொள்கிறார்கள் என்றால், அது கழக அரசுக்குக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாகவே கருதுகின்றோம்.

முதலமைச்சரின் "மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" திட்டத்திற்கு ரூபாய் 206 கோடி நிதி ஒதுக்கீடு. 2 இலட்சம் விவசாயிகள் பயனடைய, 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரப் பயிரிட ரூபாய் 20 கோடி நிதி ஒதுக்கீடு. தேவைக்கேற்ற உற்பத்தியை எட்ட வேளாண் பயிர்களில் பரப்பு விரிவாக்கம் செய்திட ரூபாய் 108 கோடி நிதி ஒதுக்கீடு. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்திற்கு ரூபாய் 65.30 கோடி நிதி ஒதுக்கீடு.

பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்கிட ஒருவருக்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் மானியம். அந்த வகையில், 100 இளைஞர்களுக்கு மானியம் வழங்கிட ரூபாய் 1 கோடி நிதி ஒதுக்கீடு. இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து மீண்டுவர பயிர்க் காப்பீட்டுத் திட்டம். அதனை

செயல்படுத்த ரூபாய் 1,775 கோடி நிதி ஒதுக்கீடு. இப்படி எண்ணற்ற திட்டங்களை வழங்கி, உழவர்களின் கண்ணீரைத் துடைத்தெறிந்த கழக அரசை வேளாண்மை பெருமக்களோடு கைகோர்த்து நானும் அளவின்றிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"ஜல்..ஜல்.." எனச் சலங்கை ஒலிக்க, வண்டிகளில் பாரம் இழுத்த காளைகள், மண் இறுகிவிடாமல் பொலபொலப்பாக்கிய உழவு மாடுகள் போன்றவை இருந்த இடத்தில் இன்றைக்கு இருப்பது இயந்திரங்கள்தான். "மனிதன் இல்லாமல் கால்நடைகள் வாழும். கால்நடைகள் இல்லாமல் மனிதனால் வாழ முடியாது." நமது பாரம்பரியக் கால்நடை இனங்கள் தற்போது அழிவின் விளிம்பில் இருக்கிறது. அவற்றைக் காக்க வேண்டியது ஓர் அரசின் கடமை. எனவே, வாக்குரிமை இல்லாத அந்த வாயில்லா ஜீவன்களைப் பற்றியும் இந்த அரசு கவலைப்படுகிறது.

விலங்குகள் இனப்பெருக்கத் தடை திட்டத்தை மேலும் முறைப்படுத்திட, தமிழ்நாட்டின் பல இடங்களில் இயங்கிவரும் இனப்பெருக்கத் தடை மையங்களை மேம்படுத்திட நடப்பு வரவுச்செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் தமிழ்நாடு விலங்குகள் நல வாரியத்திற்கு இந்த நிதியாண்டில் 11 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் கழக அரசு அறிவித்திருக்கிறது.

அடுத்ததாக, நான் சார்ந்திருக்கும் தொகுதி, மீனவ மக்கள் நிறைந்த ஒரு பகுதி என்பதால் அவர்களின் நலன் பற்றிப் பேச விரும்புகிறேன்.

அயிரை, அயிந்தி, அயிலை, ஆரால், இறவு, இறால், உய்யம், உலுவை, ஓங்கில், ஓரா, கசலி, கடந்தாய், கட்லா, கண்டல், கயல், கருங்கண்ணி, கிழங்கான், கிளி, குழல், குறவை, கூனி, கெண்டை, கெலங்கான், கெளிறு, கெளுத்தி, கொண்டை, கோலா, சங்கரா, கொண், கொழு, கொடுவா, கோட்டு, சள்ளை, சாதாக்கெண்டை, சாம்கன், சாளை, சீலா, சுறா, சுறவம், சூரை, செங்காலை, செம்மீன், திருக்கை, துதிக்கை, நெத்திலி, நொறுக்கி, பசலி, பஞ்சலை, பண்ணாக்கு, பறவை, பாசி, பாறை, பொத்தி, தேளி, மகரம், மடந்தை, மணலி, மத்தி, மயிந்தி, மலங்கு, முதுநீர், (மேசையைத் தட்டும் ஒலி) மூக்கன், வஞ்சிரம், வரால், வாளை, விரால், விலாங்கு, வீசல், வெளவால், ஜிலேபி எனப் பலவகையான மீன்கள் பற்றிச் சங்கத் தமிழ் நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. தமிழ் இலக்கியங்களில் கயல், மீன் இவை இரண்டும் பெருமளவில் உள்ளன.

ஓடு மீன் ஓட, உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்கிறது மூதுரை!

கட்டுமரம், நாவாய், தோணி, வத்தை, வள்ளம், மிதவை, ஓடம், தெப்பம், டிங்கி, பட்டுவா, வங்கம், அம்பி, திமில் என்று பல்வகையான கலம் செலுத்தியவர்கள் நம் தமிழர்கள். நம்மைச் சுற்றியுள்ள எல்லாக் கடல்களிலும் தமிழர்கள் கலம் செலுத்தியிருக்கிறார்கள். உலகப் பயணிகள் எல்லோரும் தமிழ்நாட்டுக் கடலோரத்தை நோக்கி வந்தார்கள். அந்தவகையில், தமிழ்நாட்டை உலகத்தோடு இணைத்தது கடல்தான்.

புரோட்டின், வைட்டமின், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, அயோடின், மெக்னீசியம் எனப் பலப் பல சத்துகள் இந்த மீனில் உள்ளன. சில வகை மீன்களில் அதிக அளவில் உடலுக்கு ஆற்றலைத் தருகின்ற கொழுப்பு அமிலமான "ஒமேகா 3" நிறைந்துள்ளதால், அதைச் சாப்பிடுமாறு மருத்துவர்களே பரிந்துரைக்கிறார்கள். மற்ற அசைவ உணவுகளைவிடக் கடல் உணவான மீனில் *saturated* கொழுப்பு உள்ளதால், அது உடலுக்கு உறுதி சேர்க்கிறது.

எனவே, சைவர்களும் விரும்பும் மீனிலும், அதைச் சார்ந்து வாழும் மீனவர் நலனிலும் நம் முதல்வர் அவர்கள் நிரம்பவே அக்கறை செலுத்துகிறார். உண்ணும் போதும், உறங்கும்போதும் சிறகுகளை இயக்கிக் கொண்டே இருக்கும் "ஆல்பட்ரோஸ்" பறவை போல், எப்போதும் விழித்துக்கொண்டே இருக்கும் நம் முதல்வர் அவர்களின் இந்த அருளாட்சியில், மீனவர்கள் பெறும் நன்மைகளோ ஏராளம், ஏராளம்!

மீனவர் நல வாரியம், மீன்பிடி தடைக்கால நிவாரணம், கன்னியாகுமரி, நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்ட மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குதல் போன்றவையெல்லாம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களாகும்.

1975இல்மீனவர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தைக் கொண்டு வந்தது கழக அரசு. அத்திட்டத்திற்கு மீனவர் குலத் தலைவர் "சிங்காரவேலர் வீட்டு வசதித் திட்டம்" எனப் பெயர் சூட்டி பெருமைப்படுத்தியது. அவர் பிறந்து வளர்ந்த வடசென்னையில் அவரின் பூத உடல் புதைக்கப்பட்ட ஆர்.கே.நகர் காசிமேடு பகுதியில் அவ்விடத்தை சீர் செய்து அங்கு அவருக்கு மார்பளவு சிலையை அமைத்து அவருக்கு பெருமை சேர்த்தது நமது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மீன்வளம் என்பது சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் உயர்த்திடுவது அல்ல. மக்களின் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்குவதிலும் அதற்குப் பெரும் பங்கு உண்டு. அந்தவகையில், கடல் கடந்துபோன தமிழரின் கண்ணீரால் மட்டுமல்ல, கடலோரத்தில் வாழும் தமிழர்களின் கண்ணீராலும்தான் நமது கடல் உப்பாக உள்ளது என்பதை உணர்ந்த நம் அரசு, எப்போதெல்லாம் ஆட்சிக் கட்டிலில் அமர்கிறதோ, அப்போதெல்லாம் மீனவர்களுக்காக ஏராளமான திட்டங்களை தீட்டி வந்துள்ளது. அதனால்தான், மீன்பிடி தொழிலில், இந்தியாவில் 5வது பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

தற்போதைய அரசு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் மீன்வள இளங்கலைப் பட்ட வகுப்பில் மீனவ மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை 5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக உயர்த்தி இருக்கிறது.

காணாமல் போன மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் தினசரி உதவித் தொகையை 250/ ரூபாயிலிருந்து 350/ ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இயற்கை மரணம் அடையும் மீனவர்கள் நல வாரிய உறுப்பினர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 16,000/ ரூபாயிலிருந்து 25,000/ ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுவரும் மண்ணெண்ணெயின் அளவானது மாதம் ஒன்றிற்கு 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி விசைப்படகுகளுக்கு ஆண்டுதோறும் 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டரும், நாட்டுப் படகுகளுக்கு ஆண்டு ஒன்றிற்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் உயர்த்தி விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசலாக இந்த அரசு வழங்கும் என்று சமீபத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு செய்து, அதனை நடைமுறைப்படுத்தியும் இருக்கிறார்கள்.

மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் வெற்றிபெற 6 மாத சிறப்புப் பயிற்சியை நடத்தியிருக்கிறது இந்த அரசு. வரும் நிதியாண்டில், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தூண்டில் வளைவு, மீன் இறங்குதளம், தூர்வாருதல், செயற்கைமீன் உறைவிடங்கள் போன்ற கரையோரப் பாதுகாப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் ரூபாய் 450 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இந்த உதவிகள் எல்லாம் மீனவர்களின் காய்ந்த வயிற்றுக்கு பால் வார்த்தது போல் இருக்கிறது.

மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூபாய் 5,000/ வழங்கி வந்ததைத் தேர்தல் வாக்குறுதிப்படி ரூபாய் 8,000/ ஆக உயர்த்தி வழங்கி, மீன்பிடி தடைக்காலத்திற்கு முன்பாகவே அதற்கான அரசாணையை வெளியிட்டு, 17042024 அன்று அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்த முதல்வர் அவர்களுக்கு மீனவர்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இதன் மூலம் இனி ஆண்டுதோறும் ஒரு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரம் பேர் பயன்பெற இருக்கிறார்கள். இப்படி மக்களுக்காக மக்களுடன் பயணிக்கின்ற இந்த ஆட்சியில் மீனவர் நலன் சார்ந்த எனது சில கோரிக்கைகளையும் அவையில் வைக்க விரும்புகின்றேன்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை சிறையில் உள்ள மீனவர்களுக்கு வழங்கும் தினப்படியை ரூபாய் 250/ லிருந்து ரூபாய் 350/ஆக உயர்த்தி வழங்கிய கழக அரசுக்கு மீனவர்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இத்தினப்படியை ரூபாய் 500/ஆக உயர்த்தி வழங்க பரிசீலிக்க வேண்டுகின்றேன். கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், அரசியலிலும் மீனவர்கள் தங்களுக்கான பிரதிநிதித்துவம் பெற வேண்டுமானால், மத்திய அரசு மூலம் அவர்களைப் பழங்குடி ST இனப் பட்டியலில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். தேசிய கடல் மீனவர் சேமிப்புத் திட்டமானது தற்போது ரூபாய் 4,500/ என்று இருப்பதை ரூபாய் 8,000/ ஆக உயர்த்தி வழங்க வேண்டுகிறேன். கடலில் மீனவர்களுக்கு விபத்து அல்லது உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க, நவீன வசதிகளோடு கூடிய ஒரு கடல் *ambulance*ஐயோ அல்லது மீனவர்கள் காணாமல் போனால் அவர்களை விரைந்து தேட ஏதுவாக நவீனப் படகு ஒன்றையோ சென்னைக் காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்க வேண்டுகிறேன்.

சென்னைக் காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தை தமிழக அரசே ஏற்று நடத்தப் பரிசீலிக்க வேண்டுகிறேன். மிக்ஜாம் புயல் மற்றும் பருவமழை போன்றவற்றில் சேதமுற்ற படகுகளில் விடுபட்ட விசைப் படகுகளுக்கும், அதிகளவில் சேதமுற்ற நிலையில் குறைந்தளவு இழப்பீடு மட்டுமே வழங்கப்பட்ட படகுகளுக்கும் உரிய இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். ஆண்டு ஒன்றுக்கு தமிழக மீனவர்களால் அந்நிய செலாவணியாக 6,000/ கோடி ரூபாய் ஈட்டித் தரப்படுகிறது. அத்தகைய மீனவர்களின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்க, காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தை நவீனப்படுத்த ஏற்கனவே ஒதுக்கீடு செய்த நிதியுடன் கூடுதல் நிதி ஒதுக்கி, குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை அங்கு விரைந்து முடித்திட வேண்டுகின்றேன். சென்னைக் காசிமேடு துறைமுகத்தை ஒரு சர்வதேச துறைமுகமாக தரம் உயர்த்தி அங்கு மீன்வளப் பூங்கா ஒன்றை அமைத்திட வேண்டுகின்றேன். தமிழ்நாடு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் 60 வயதிற்குமேல் விடுவிக்கப்படும் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களுக்கு மீனவர் நலவாரியம்மூலம் ஓய்வூதியம் வழங்க வேண்டுகிறேன். கடலில் மீன்பிடிக்கும்போது மீனவர்கள் இயற்கையாக இறக்க நேரிட்டால், அவர்களுக்கு விபத்து நிவாரணம் என்றொரு நிவாரணத்தை அளிக்க வேண்டுகிறேன். இந்த அரசின் எழிலார்ந்த சாதனைகளுக்கு மீனவர்களோடு என் நாவும் இணைந்து நன்றிசொல்லும் என்று கூறி இந்த அவையிலே முதல்வர் அவர்களை மீண்டும் ஒருமுறை வணங்கி, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலன் மற்றும் பால்வளத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் எனது உரையை நிறைவு செய்து, எனது தொகுதிக் கோரிக்கையாக ஒரேயொரு கோரிக்கையை மட்டும் வைக்க விரும்புகின்றேன்.

தமிழ்வழி மருத்துவக் கல்லூரி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய ஒன்றியத்திலேயே முதல்முறையாக தொற்றுநோய் சிகிச்சைக்கென கட்டப்பட்ட மிகவும் பழமைவாய்ந்த மருத்துவமனை ஆர்.கே.நகர் பகுதியில் உள்ள தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையாகும். இம்மருத்துவமனை வளாகத்தில் பயன்பாடில்லாமல் கிட்டத்தட்ட 16 ஏக்கர் நிலம் காலியாக உள்ளது. அதனையும், அதனைச் சுற்றி பொதுப் பணித் துறைக்கு சொந்தமான 10 ஏக்கர் காலியிடத்தையும் ஒருங்கிணைத்து அவ்விடத்தில் வடசென்னையில் உள்ள ஆர்.கே.நகர், பெரம்பூர், ராயபுரம், மாதவரம், மணலி, திருவொற்றி யூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெரும்பான்மையான ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்நோக்கு மருத்துவமனையுடன் கூடிய புதிய தமிழ் வழி மருத்துவக் கல்லூரி ஒன்றினை அமைத்துத்தருமாறு முதல்வர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு ஜே.ஜே. எபினேசர் பேசினார்.

ஆயிரம் விளக்கு பகுதி 118 வது வட்டத்தை சார்ந்த

முன்னாள் மாமன்ற உறுப்பினர் ப.சிவா மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன். 27

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்டத்தைச் சார்ந்த முன்னாள் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி துணைச் செயலாளரும், முன்னாள் மாவட்டப் பிரதிநிதியும், முன்னாள் ஆயிரம் விளக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளரும், 118 வட்ட முன்னாள் மாமன்ற உறுப்பினருமான ப.சிவா அவர்கள் நேற்று (26.6.2024 புதன்கிழமை) இரவு 8 மணி அளவில், உடல்நிலை குறைவினால் காவேரி மருத்துவமனையில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் கத்திற்றல் சாலை மாரிஸ் உணவகம் எதிரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று (27.6.2024 வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில் கீழ்பாக்கத்தில் உள்ள கல்லறையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதையும் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் ஆழ்ந்த இரங்கலை 118 வது வட்ட தி.மு.க. சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்.

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சேத்துப்பட்டில் உள்ள கூட்டுறவு ஒன்றிய அலுவலக கட்டடத்தின் 4ஆவது தளத்தில் அமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு நினைவரங்கம் வானவில்' கூட்டரங்கத்தை திறந்து வைத்தார். உடன் கூட்டுறவு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் உள்ளனர்.

சாதிவாரிக் கணக்கெடுப்பிற்கு பேரவையில்

தனித் தீர்மானம் கொண்டு வந்த முதல்வருக்கு நன்றி!

முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் சே.கருணாஸ் பாராட்டு!

சென்னை, ஜூன் 27-

"சாதிவாரிக் கணக்கெடுப்பிற்கு பேரவையில் தனித் தீர்மானம் கொண்டு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முக்குலத்தோர் புலிப்படைத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சே.கருணாஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுதுறித்து முக்குலத்தோர் புலிப்படைக் கட்சி தலைவர் சே.கருணாஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தினால்தான் உண்மையான சமூக நீதி காக்கப்படும் என்று கடந்த 06.04.2024 அன்று விரிவான அறிக்கையை வெளியிட்டேன். அதுமட்டுமின்றி சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி அதன் அடிப்படையிலேயே இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று நான் (சே.கருணாஸ்) 2016 சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்று 2021 வரை சட்டமன்ற அவையில் வலியுறுத்தி வந்துள்ளேன். நான் மட்டுமல்ல பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும். பொது அரசியல் நோக்கர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே அனைவரின் ஒருமித்தக் கருத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்று 26.06.2024 அன்று சாதிவாரிக் கணக்கெடுப்புக் குறித்த தனித் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளார். முக்குலத்தோர் புலிப்படை கட்சியின் சார்பில் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு!

சாதிவாரியாக மக்கள்

தொகைக் கணக்கெடுப்பு செய்யப்பட்டால்தான் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும், பட்டியலினப் பிரிவினருக்கும் அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீட்டை உயர்த்தி வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சென்னை உயர்நீதிமன்றம் மேற்சொன்ன தீர்ப்புகளில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் சாதிவாரியான கணக்கெடுப்பை நடத்த இதுவே சரியான தருணமாகும். இட ஒதுக்கீடு தொடர்பான பல வழக்குகளில் எந்த புள்ளிவிவரத்தின் அடிப்படையில் இந்த ஒதுக்கீடு தரப்படுகிறது. என்று நீதிமன்றங்கள் கேள்வி எழுப்பப்படும்போது சாதிவாரி கணக்கெடுப்பு என்பது அவசியமாகிறது.

சுதந்திர இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, சாதி தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படவில்லை. பட்டியலினத்தினர், பழங்குடியினர் சாதி தொடர்பான தகவ மட்டுமே சேகரிக்கப்பட்டது.

நீதிமன்றம் மறுத்து வருகிறது!

அப்போதிலிருந்து இந்திய அரசு ஒரு கொள்கை முடிவாக சாதி வாரி கணக்கெடுப்பை தவிர்த்து வருகிறது. 1948ஆம் ஆண்டின் சட்டத்தில், பொதுவாக சாதி தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் விதிமுறைகள் ஏதும் கிடையாது. ஆகவே, இது தொடர்பாக தொடரப்படும் வழக்குகளில், இந்தச் சட்டத்தை மேற்கோள் காட்டி, சாதி தொடர்பான மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு உத்தரவிட நீதிமன்றம் மறுத்தும் வருகிறது.

அதேபோல, இட ஒதுக்கிட்டினால் ஒரு சில சமூகங்களே அதிகம் பலன் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. அதை நிரூபிக்கவும் சாதி சார்ந்த புள்ளிவிவரங்கள் தேவை.

சாதிக் கணக்கெடுப்பில் இருந்து வெளிவரும் புள்ளிவிவரங்கள் மூலம், யாருக்கு என்ன எண்ணிக்கை உள்ளது மற்றும் சமூகத்தின் வளங்களில் யாருக்கு என்ன பங்கு உள்ளது என்ற உண்மைகள் வெளிவரும். இட ஒதுக்கீட்டு அளிப்பதில் ஒரு தெளிவு கிடைக்கும். அந்த வகையில் மத்திய அரசிற்கு ஓர் அழுத்தம் கொடுக்கும் வகையில் தமிழக முதல்வர் கள் இன்று தனித்தீர்மானித்தை கொண்டு வந்துள்ளார்.

அரசு ஏற்றுள்ளது!

மேலும், ஒரு சாதிக்கு தனியாக இட ஒதுக்கீடு கொடுக்கும்போது, இன்னொரு சாதியினர் தங்களுக்கும் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் எனக் கோருகின்றனர். அவர்களுக்கு எத்தனை சதவிதம் கொடுப்பது என்று அரசினால் முடிவெடுக்க முடியாது. ஏனென்றால் அரசிடம் சாதி தொடர்பாக எந்தப் புள்ளிவிவரமும் கிடையாது. இதனால், எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறது. அதனால் நாங்கள் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என கோருகிறோம்! அதை அரசு இன்று ஏற்றுள்ளது

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தும் போது அனைத்து சமூகங்களின் கோரிக்கைகளை ஏற்று, சமூக நீதியை நிலை நிறுத்த முடியும், அனைத்து சமூக மக்களும் சம உரிமை பெற சாதிவாரி கணக்கெடுப்பு என்பது முக்கிய மானது. அதன் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவதே சமூகநீதியாகும். அந்த சமூகநீதியை காக்க இன்று தனித்தீர்மானம் கொண்டு வந்திருக்கிற தமிழக முதல்வர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சே.கருணாஸ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில், நேற்று (26.06.2024) மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், தூர்வாரும் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி.அமித், (தெற்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), தலைமைப் பொறியாளர்கள் எஸ்.ராஜேந்திரன் (பொது), எஸ்.சக்திமணிகண்டன், மேற்பார்வை பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி/இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.